# <u>சிதம்பரம் நகராட்சி</u>

## 2024ம் ஆண்டு மாசி திங்கள் 11ம் நாள் 23.02.2024ந்தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்

**மன்றகூட்டப்பொருள்**

**1**) நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜனவரி 2024 மாத நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.668, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2)** கோவை நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு தேர்வு நிலை நகராட்சியான சிதம்பரம் நகராட்சிக்கு 2022-2023ம் ஆண்டு பங்குத் தொகையாக ரூ.125000/- செலுத்த மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்:1301/2023/சி1)**

**தீர்மானம் எண்.669, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**3)** இந்நகராட்சிக்குட்டபட்ட வார்டு எண்: 33-ல் உள்ள திரு.J.பிரபாகர் என்பவருக்கு ரயில்வே பீடர் ரோட்டில் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது, அக்குடியிருப்புக்கு S.P.கோயில் தெருவில் தவறுதலாக வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, S.P.கோயில் தெரு மண்டல மதிப்பானது **ரூ.1.80 அ** மண்டலமாகும், மேலும் ரயில்வே பீடர் ரோடு மண்டல மதிப்பு **ரூ.1.05 இ** மண்டலமாகும், தவறுதலாக S.P.கோயில் தெரு மண்டல மதிப்பில் விதிக்கப்பட்ட வரியினை நீக்கம் செய்து புதிதாக ரயில்வே பீடர் ரோடு மண்டல மதிப்பிற்கு வரி நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்: 00059/2024/அ2)**

**தீர்மானம் எண்.670, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**4)** சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களின் உரிம காலம் **31.03.2024** உடன் முடிவடைவதால் **01.04.2024** முதல் **31.03.2027** வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட இந்நகர் மன்ற தீர்மான எண்**. 640,** நாள்**. 05.01.2024** ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது**.**

அதன் பேரில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **31.01.2024** அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒரு ஆண்டு கேள்வியாக **(2024–2025) 12** இனங்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது**.** (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது**)** மேலும் இனம் எண்**. 4** மற்றும் **14**ற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை**.** மேற்படி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது**.**

**சிதம்பரம் நகராட்சி**

**01.04.224 முதல் 31.03.2027 வரையிலான மூன்றாண்டு குத்தகை இனங்கள் விபரம்**

| வ.எண். | குத்தகை இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் (திருவாளர்கள் / திருமதிகள்) | சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ. | மூன்றாண்டு சராசரி ரூ | (ஓராண்டு கேள்வி) 2024–2025ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஞானப்பிரகாசம் தெரு மார்கெட் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | எம்.ரவிச்சந்திரன் கீழமாரியம்மன் கோவில் தெரு, சிதம்பரம். 9443574147 | 248063 | 236438 | 249500 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் சென்ற ஆண்டினை விட 0.57 % கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை 5.52 % கூடுதலாகவும் உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| 2 | வடக்கு மெயின்ரோடு மச்ச மாமிச மார்கெட்டில் உள்ள வெளிப்புறக்கடைகள் நீங்கலாக மற்றவைகளுக்கும் மச்ச மார்கெட் உள் கடைகளுக்கும் சேர்த்து கட்டணம் வசூல் செய்யும் உரிமை | கோபு 15, ஆசிர்வாதம் நகர், சிதம்பரம். 9080336690 | 639560 | 609588 | 641000 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் சென்ற ஆண்டினை விட 0.22 % கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை 5.25 % கூடுதலாகவும் உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| 3 | நகரில் உள்ள எல்லா தெருக்களிலும் நகராட்சி சட்டம் 270 பிரிவின் கீழ் கட்டணம் வசூல் செய்யும் உரிமை (கீழவீதி மற்றும் கீழசன்னதியில் திருவிழா காலங்களில் மட்டும் நீங்கலாக) | இளங்கோவன் 12, எஸ்.ஆர்.நகர் சிதம்பரம். 9942558875. | 1062479 | 1012688 | 1063000 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் சென்ற ஆண்டினை விட 0.04 % கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை 4.96 % கூடுதலாகவும் உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | தந்தைபெரியார் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை பகல் இரவு இரு நேரங்களிலும் வசூல் ஒரே ஏலமாக. | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை | 0 | 0 | 0 | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. எனவே மறு ஏலம், மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| 5 | இந்நகராட்சி எல்லைக்குள் வந்து செல்லும் யாத்ரீகர்கள் ஊர்திகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | வெங்கட்ராமன்18, மெய்கார தெரு,சிதம்பரம். | 1984500 | 1891500 | 1985500 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் சென்ற ஆண்டினை விட 0.50 % கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை 4.96 % கூடுதலாகவும் உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| 6 | பயணியர் விடுதி வளாகத்தில் நிறுத்தப்படும் சைக்கிள் மற்றும் இரு சக்கர மோட்டார் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை. | சந்திரசேகரன் 6 அரங்கநாதன் நகர் சிதம்பரம் | 954765 | 910022 | 957000 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் 0.23 % சென்ற ஆண்டினை விடவும் மூன்றாண்டு சராசரி தொகையில் 5.16 % கூடுதலாக உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| 7 | ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | சி.கோபு 15 ஆசிர்வாதம் நகர் சிதம்பரம் | 96469 | 91948 | 97500 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் 1.06 % சென்ற ஆண்டினை விடவும் மூன்றாண்டு சராசரி தொகையில் 6.03 % கூடுதலாகவும் உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | மேலவீதியும், தெற்குவீதியும் சந்திக்குமிடத்தில் உள்ள குளியல் அறை , சிறுநீர் மல அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | கே.ஆனந்தி மெயின் ரோடு, வல்லம்படுகை | **296021** | **282149** | 297500 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் 0.49 % சென்ற ஆண்டினை விடவும், மூன்றாண்டு சராசரி தொகையில் 5.44 % கூடுதலாக உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| 9 | தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளின் கால அறிவிப்பினை ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யும் உரிமை | பாலமுருகன் மெயின் ரோடு நஞ்சாலூர் | **16648** | **15868** | 17100 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் 2.71 % சென்ற ஆண்டினை விடவும், மூன்றாண்டு சராசரி தொகையில் 7.76% கூடுதலாகவும் உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| 10 | கீழரத வீதியில் சன்னதிக்கு தென்புறம் உள்ள நவீன சிறுநீர் மலஅறை மற்றும் குளியல் அறை மற்றும் முதல் தளத்தில் உள்ளவற்றில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | ஜி.வெங்கட்ராமன்18 மெய்காவல் தெரு, சிதம்பரம் | **1874360** | **1786522** | 1875000 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் 0.03 % சென்ற ஆண்டினை விடவும், மூன்றாண்டு சராசரி தொகையில் 4.95 % கூடுதலாக உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| 11 | தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுவரும் கட்டண கழிவறை உரிமம் | மீனா க/பெ.ராமராஜ் 24/30 மெய்காவல் தெரு, சிதம்பரம் | **1305801** | **1244607** | 310500 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மிகவும் குறைவாக உள்ளதால் இதனை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| 12 | கொத்தவால் தெருவில் உள்ள குளியல் அறை சிறுநீர் மல அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | கேட்பு பட்டியலில் நீக்கம் செய்யப்பட்டது. (இந்நகர் மன்ற தீர்மான எண். 640, நாள். 05.01.2024 ) | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | இளமையாக்கினார் கோயில் தெரு கழிவறை சிறுநீர் மல அறை மற்றும் குளியலறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | சாரதா இளமையாக்கினார் கோவில் தெரு, சிதம்பரம் | 38588 | 36779 | 40000 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையில் 3.65 % சென்ற ஆண்டினை விடவும் மூன்றாண்டு சராசரி தொகையில் 8.75% கூடுதலாக உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| 14 | தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் வண்ண தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம். | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை | 367503 | 350281 | 0 | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. எனவே மறு ஏலம், மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| 15 | தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறையில் (கிளாக் ரூம்) கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | வீரமுருகன் சுசீலா நகர், கொத்தங்குடி தெரு சிதம்பரம் | 347985 | 331678 | 40500 | இந்த இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டினை விடவும் மூன்றாண்டு சராசரி தொகையினை விடவும் மிகவும் குறைவாக உள்ளதால் இதனை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |

**அலுவலக குறிப்பு :**

1. பட்டியலில் கண்டுள்ளவாறு வரிசை எண். 1, 2, 3 மற்றும் 5 முதல் 10 வரை மற்றும் 13 வரையிலான இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை ஏற்கலாம்.
2. வரிசை எண். 4, தந்தை பெரியார் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளின் வசூல் உரிமம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. மேலும் வைப்புத் தொகை கூடுதலாக உள்ள காரணத்தினால் முன்வரவில்லை என தெரியவருவதால், தற்போது ஏல அறிக்கையில் உள்ள வைப்பு தொகையில் 1/3 பகுதி வைப்புத் தொகையாக மாற்றி நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரிசை எண். 11, தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மிகவும் குறைவாக உள்ளதால் இதனை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
4. வரிசை எண். 14, தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் வண்ண தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க எவரும் முன்வரவில்லை. ஆகையால் இந்த இனத்திற்கு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
5. வரிசை எண். 15, தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறையில் (கிளாக் ரூம்) கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு, ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டினை விடவும் மூன்றாண்டு சராசரி தொகையினை விடவும் மிகவும் குறைவாக உள்ளதால் இதனை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**(ந.க.எண்: 2743/2023/அ1)**

**தீர்மானம் எண்.671, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5)** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பு திட்டமான காலை சிற்றுண்டி திட்டம், சிதம்பரம் நகராட்சி பகுதிகளில் உள்ள 9 பள்ளிகள் மற்றும் அண்ணாமலைநகர் பேரூராட்சியில் 2 பள்ளிகள் மொத்த 11 பள்ளிகளில் 25.08.2023 முதல் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பரிமாறுதல் பணி செய்யும் பணியாளர்களுக்கு கல்வி நிதியிருந்து ஒரு நபருக்கு மாதம் ரூபாய் 1500/- வீதம் நகராட்சி நிர்வாகம் இயக்குனர், சென்னை அவர்களின் 02.11.2022 ஆம் தேதி கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1-ன்படி ஊக்க தொகையாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. . அதன்படி பொது நிதி /கல்வி நிதியிருந்து மேற்படி பணியாளர்களுக்கு மாதாமாதம் ஒரு நபருக்கு ரூபாய் 1500/-வீதம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கும், கடிதம் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்: 548/2023/இ1)**

**தீர்மானம் எண்.672, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6)** இந்நகராட்சியில் சொத்துவரி, காலிமனை வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு ஆண்டுகள் வரி வசூலினை தீவிரப்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் காணொலி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே வரி வசூலினை தீவிரப்படுத்திட ஏதுவாக ஆட்டோவில் ஒலிபெருக்கி மூலம் அனைத்து வார்டுகளிலும் விளம்பரம் செய்வதற்கு செலவினத் தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்: 2184/2023/அ2)**

**தீர்மானம் எண்.673, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**7)** சிதம்பரம் நகராட்சி SFC SCHOOL IMPROVEMENT GRANT - OPERATION AND MAINTENANCE WORKS (PHASE-II) 2023-24-ன்கீழ் மதிப்பீடு ரூ.18.50 இலட்சத்திற்கு சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட மானா தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிய கழிவறை கட்டும் பணிக்கு 19.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.கே.முத்துலட்சுமி, பணங்காடு ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண்.674, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**8)** சிதம்பரம் நகராட்சி SFC SCHOOL IMPROVEMENT GRANT - OPERATION AND MAINTENANCE WORKS (PHASE-II) 2023-24-ன்கீழ் மதிப்பீடு ரூ.18.50 இலட்சத்திற்கு சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கொத்தங்குடி தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிய கழிவறை கட்டும் பணிக்கு 19.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கே.வடிவேல், சிதம்பரம் ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண்.675, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**9)** சிதம்பரம் நகராட்சி SFC SCHOOL IMPROVEMENT GRANT - OPERATION AND MAINTENANCE WORKS (PHASE-II) 2023-24-ன்கீழ் மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட மானா தெரு கிழக்கு பகுதி வகுப்பறை மேம்பாடு செய்யும் பணிக்கு 19.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி கே.முத்துலட்சுமி, பணங்காடு ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண்.676, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**10**) சிதம்பரம் நகராட்சி SFC SCHOOL IMPROVEMENT GRANT - OPERATION AND MAINTENANCE WORKS (PHASE-II) 2023-24-ன்கீழ் மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வடக்கு மெயின்ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியினை மேம்பாடு செய்யும் பணிக்கு 19.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ்.கிருஷ்ணமூர்த்தி நாஞ்சலூர், ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண்.677, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**11**) சிதம்பரம் நகராட்சியில் வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையம் மூலம், மானா தெரு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நடராஜா கார்டன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கனகசபை நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சிவசிவ நகர் உயர்மட்ட தொட்டி மற்றும் மீன்மார்க்கெட் ஆழ்துளை கிணறு, வீரபத்ரசாமி கோயில் தெரு ஆழ்துளை கிணறு மற்றும் பேருந்து நிலைய கீழ்நிலை தொட்டி மூலமாக சிதம்பரம் நகருக்கு நாள்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இப்பணிகள் மேற்கொள்ள போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததாலும், நகரப்பகுதியில அவ்வப்போது ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்யவும், நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படாவண்ணமும், பொதுமக்களின் நலன் கருதியும், **14** நபர்களை ஒப்பந்த அடிப்படையில் வைத்து குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். **95**, நாள் **29.11.2019** அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் **21.11.2019** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். **111**, நாள்: **29.11.2019**–ன்படி ஒப்பந்ததாரர் திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு **29.11.2019**–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **01.12.2019** முதல் **30.11.2020** வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறும் நடவடிக்கையில் காலதாமதம், கொரானா தொற்று நோய் மற்றும் **2021** சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் போன்ற காரணங்களால் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டது. இதனால் நகர்மன்ற தீர்மான எண்.**111**, நாள் **30.11.2020**, நகர்மன்ற தீர்மோன எண்.**154**, நாள் **26.02.2021**, நகர்மன்ற தீர்மான எண்.**215**, **28.06.2021** நகர்மன்ற தீர்மான எண். **245**, நாள் **31.08.2021**, தீர்மான எண். **306**, நாள் : 30.11.2021 , தீர்மான எண்.**1**, நாள் : 11.04.2022, தீர்மான எண். **93**, நாள் : **30.06.2022** , தீர்மான எண். **162**, நாள் : **30.08.2022** , தீர்மான எண். **260**, நாள் : **09.01.2023**, தீர்மான எண். **289**, நாள் : 20.02.2023 மற்றும் தீர்மான எண். **368**, நாள் : 17.05.2023, தீர்மான எண். **451**, நாள் : **21.09.2023** மற்றும் தீர்மான எண். **617**, நாள் : 11.12.2023 போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து **29.02.2024** வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிப்புறபணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலகத்தில் தொடர் நடவடிகையில் உள்ளது. இதனால் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களுக்கு வழங்கப்படும் தினசரி குடிநீர் விநியோகப்பணியில் அவசர அவசியம் கருதி, மேலும் மூன்று மாத காலத்திற்கு **01.03.2024** முதல் **31.03.2024** வரை இதே ஒப்பந்ததாரர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும், இதற்கான மூன்று மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.**6.50** இலட்சத்திற்கும் இதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 336/2019/இ1)

**தீர்மானம் எண்.678, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**12**) சிதம்பரம் நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| டேங்கர் லாரி | –– | 2 எண்கள் |
| டம்பர் பிளேசர் | –– | 1 எண். |
| ஈப்பு | –– | 1 எண். |
| JCB | –– | 1 எண். |
| டிராக்டர் | –– | 4 எண்கள். |
| சல்லேஜ் டேங்கர் | –– | 1 எண். |
| ஜெட் ராடிங் | –– | 2 எண்கள். |
| டி–சில்டிங் | –– | 1 எண். |
| நகர்மன்ற வாகனம் | –– | 1 எண். |
| | | –– |
| மொத்தம் | –– | 14 எண்கள் |
| | | –– |

மேற்கண்ட வாகனங்களை இயக்குவதற்கு, நகராட்சியில் மூன்று நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளார்கள். குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்றுதல், பொது சுகாதார பணிகள், குப்பை அகற்றுதல் போன்ற இன்றியமையாத பணிகள் இதனால் பாதிப்படைகின்றது. இதனை தவிர்க்கும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கருதியும், பொறியியல் பிரிவிற்கு 4 மூன்று ஓட்டுனர்களும், பொது சுகாதார பிரிவிற்கு 3 ஓட்டுனர்களும் ஒப்பந்த அடிப்படையில் வைத்து பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 94, நாள் 29.11.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.104, நாள் 29.11.2019–ன்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு 29.11.2019–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறும் நடவடிக்கையில் காலதாமதம், கொரானா தொற்று நோய் மற்றும் 2021 சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் போன்ற காரணங்களால் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டது. இதனால் நகர்மன்ற தீர்மான எண்.109, நாள் 30.11.2020, நகர்மன்ற தீர்மான எண்.152, நாள் 26.02.2021, நகர்மன்ற தீர்மான எண்.216, 28.06.2021 நகர்மன்ற தீர்மான எண். 245, நாள் 31.08.2021 , தீர்மான எண்.305, நாள் : 30.11.2021 மற்றும் தீர்மான எண்.2, நாள்:11.04.2022, தீர்மான எண். 94, நாள் : 30.06.2022 , தீர்மான எண். 163, நாள் : 30.08.2022 மற்றும் தீர்மான எண். 264, நாள்:09.01.2023 , தீர்மான எண். 285, நாள்:20.02.2023, தீர்மான எண். 369, நாள் : 17.05.2023 , தீர்மான எண். 449, நாள் : 21.09.2023 மற்றும் தீர்மான எண். 618, நாள் : 11.12.2023 போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து 29.02.2024 வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிப்புறபணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலகத்தில் தொடர் நடவடிகையில் உள்ளது. இதனால் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி, மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.03.2024 முதல் 31.05.2024 வரை இதே ஒப்பந்ததாரர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும், இதற்கான மூன்று மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.4.25 இலட்சத்திற்கும் இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 336/2019/இ1)

**தீர்மானம் எண்.679, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**13**) சிதம்பரம் நகராட்சியில் 79 எண்ணிக்கை சிறுமின்விசை பம்புகள், தலைமை நீரேற்று நிலைய மோட்டார், மானா தெரு உயர்மட்ட தொட்டி மோட்டார், நடராஜா கார்டன் உயர்மட்ட தொட்டி மோட்டார், கனகசபை நகர் உயர்மட்ட தொட்டி மோட்டார், மேலரத வீதி மோட்டார், சிவசிவ நகர் உயர்மட்ட தொட்டி மோட்டார், மீன்மார்க்கெட் போர்வெல், வீரபத்ரசாமி கோயில் தெரு போர்வெல் மற்றும் மூன்று புதைசாக்கடை திட்ட நிலையங்களில் உள்ள மோட்டார் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்கள் அங்கன்வாடி மையங்கள் மற்றும் அலுவலக கட்டிடங்களில் உள்ள மின் பணிகளை பார்க்கவும் நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாததாலும், நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அத்தியாவசிய பணி என்பதாலும், மூன்று நபர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 92, நாள் 29.11.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். 112, நாள் 29.11.2019–ன்படி ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு 29.11.2019–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறும் நடவடிக்கையில் காலதாமதம், கொரானா தொற்று நோய் மற்றும் 2021 சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் போன்ற காரணங்களால் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டது. இதனால் நகர்மன்ற தீர்மான எண்.110, நாள் 30.11.2020, நகர்மன்ற தீர்மான எண்.155, நாள் 26.02.2021, நகர்மன்ற தீர்மான எண்.214, 28.06.2021 நகர்மன்ற தீர்மான எண். 245, நாள் 31.08.2021 , தீர்மான எண். 309, நாள்:30.11.2021 மற்றும் தீர்மான எண். 3, நாள்:11.04.2022 , தீர்மான எண். 95, நாள்:30.06.2022 , தீர்மான எண். 164, நாள் : 30.08.2022, நகர்மன்றஎண். 261, நாள் : 09.01.2023 , தீர்மான எண். 286, நாள் : 20.02.2023 மற்றும் தீர்மான எண். 370, நாள்:17.05.2023 , தீர்மான எண். 450,

நாள்:21.09.2023 மற்றும் தீர்மான எண். 619, நாள்:11.12.2023 போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து 29.02.2024 வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிப்புறபணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலகத்தில் தொடர் நடவடிககையில் உள்ளது. இதனால் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி, மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.03.2024 முதல் 31.05.2024 வரை இதே ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் என்பவரின் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும், இதற்கான மூன்று மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கும் இதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 336/2019/இ1)

**தீர்மானம் எண்.680, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**14)** சிதம்பரம் நகராட்சியில் வருடந்தோறும் தோராயமாக பல திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றை கண்காணிக்க போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாததால், இரண்டு தொழில்நுட்ப உதவியாளரை ஒப்பந்த அடிப்படையில் PWDSchedule of rate 2019–20–ன் விலை விகிதத்தின் அடிப்படையில் அமர்த்தி பணிகளை மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 93, நாள் 29.11.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.105, நாள் 29.11.2019–ன்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு 29.11.2020–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 108, நாள் :31.12.2020–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.12.2020 முதல் 28.02.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அனுமதிபெற காலதாமதம் ஏற்படுவதாலும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் வர இருப்பதாலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் வந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.156, நாள் : 26.02.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.03.2021 முதல் 31.05.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற காலதாமதமாக இருப்பதால், அத்தியாவசிய பணியின் காரணமாக நகர்மன்ற தீர்மான எண். 217, நாள் :28.06.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.06.2021 முதல் 31.08.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் நகர்மன்ற தீர்மான எண். 250, நாள் 31.08.2021, தீர்மான எண். 309, நாள் : 30.11.2021 மற்றும் தீர்மான எண்.4, நாள் : 11.04.2022 , தீர்மான எண். 96, நாள் : 30.06.2022 , தீர்மான எண். 165, நாள் : 30.08.2022, தீர்மான எண். 262, நாள் : 09.01.2023 , தீர்மான எண். 287, நாள் : 20.02.2023, தீர்மான எண். 371, நாள் : 17.05.2023 , தீர்மான எண். 452, நாள் : 21.09.2023 மற்றும் தீர்மான எண். 620, நாள் : 11.12.2023 போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து 29.02.2024 வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிபுறபணியாளர்கள் அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நடைபெற்று வருவதால் அனுமதிபெற காலதாமதம் ஆகும் என தெரிவித்ததன் அடிப்படையிலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.03.2024 முதல் 31.05.2024 வரை மேற்கண்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 336/2019/இ1)

**தீர்மானம் எண்.681, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**15)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட 2274 தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்வதற்கு நான்கு மின் கம்பியாளர்கள், நான்கு மின் கம்பி உதவியாளர்கள் கொண்டு பராமரிக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது ஒரு மின் கம்பியாளர் மட்டுமே உள்ளனர்.இதனால் பருவமழை காலங்களிலும், மின்னழுத்த வேறுபாடுகளின்போதும், அடிக்கடி ஏற்பட்டு வரும், தெருவிளக்கு பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய இயலாத நிலை உள்ளன.போதிய பணியாளர்களின்றி 160 எண்கள் சுவிட்சுகள் இயக்கம் மற்றும் பராமரிக்க மிகவும் கடினமான நிலை உள்ளதோடு உரிய நேரத்தில் விளக்குகளை எரியவைப்பது மற்றும் அமைக்கும் பணி சுணக்கமாகி மின் விரயம் ஏற்படுகிறது.

எனவே, மூன்று மின் கம்பியாளர் கிரேடு–2, பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 90, நாள் 2911.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.107, நாள் 29.11.2019–ன்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு 29.11.2019–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகர்மன்ற தீர்மான எண். 112, நாள் :31.12.2020–ன்படி நான்குமாத காலத்திற்கு 01.12.2020 முதல் 31.03.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அனுமதிபெற காலதாமதம் ஏற்படுவதாலும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் வர இருப்பதாலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் வந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.153, நாள் : 26.02.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.04.2021 முதல் 31.06.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற காலதாமதமாக இருப்பதால், அத்தியாவசிய பணியின் காரணமாக நகர்மன்ற தீர்மான எண். 218, நாள் :28.06.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.07.2021 முதல் 30.09.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் நகர்மன்ற தீர்மான எண். 251, நாள் 30.09.2021–ன்படி 31.12.2021, தீர்மான எண். 307, நாள்:30.11.2021 மற்றும் தீர்மான எண்.5, நாள் : 11.04.2022 , தீர்மான எண். 97, நாள் : 30.06.2022 , தீர்மான எண். 166, நாள்:30.08.2022 , தீர்மான எண். 263, நாள் : 09.01.2023, தீர்மான எண். 288, நாள் : 20.02.2023 , தீர்மான எண். 450, நாள்:21.09.2023 மற்றும் தீர்மான எண். 631, நாள்:11.12.2023 போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து 29.02.2024 வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிபுறபணியாளர்கள் அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நடைபெற்று வருவதால் அனுமதிபெற காலதாமதம் ஆகும் என தெரிவித்ததன் அடிப்படையிலும், தற்போதுள்ள ஒரு மின்கம்பியாளர் தொடர்ந்து மருத்து விடுப்பில் உள்ளதாலும், பருவமழைக்காலங்களிலும் மின் அழுத்த வேறுபாடுகளின்போதும் அடிக்கடி ஏற்படக்கூடிய தெருவிளக்கு பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய இயலாத நிலை உள்ளன. மேலும் போதிய பணியாளர்களின்றி 236 எண்கள் சுவிட்சுகள் இயக்கம் மற்றும் பராமரிக்க மிகவும் கடினமான நிலை உள்ளதோடு உரிய நேரத்தில் விளக்குகளை எரியவைப்பது மற்றும் அணைக்கும் பணி சுணக்கமாகி மின் விரயம் ஏற்படுகிறது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாத காலத்திற்கு நான்கு மின்கம்பியாளரை வைத்து பணி மேற்கொள்வதற்கு 01.03.2024 முதல் 31.05.2024 வரை மேற்கண்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.2.15 இலட்சத்திற்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 336/2019/இ1)

**தீர்மானம் எண்.682, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**16)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய 05.01.2024 அன்று பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS) 2023-24-ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எ ண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS) 2023-24 | | | | |
| 1 | சிதம்பரம் வெல்லபிறந்தான் தெரு, பஜனை மடத்தெருவில் மழைநீர் வடிகால் பணி | மெஸ்ஸர்ஸ் பாலன் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், எண்.10/2, வெல்லபிறந்தான் தெரு,சிதம்பரம். | 5,00,000/– | மதிப்பீட்டு விலையைவிட(-)0.06% குறைவு | |
| | | மெஸ்ஸர்ஸ் ஜெ.பி எலக்ட்ரிகல்ஸ், வடலூர் | | –– | மதிப்பீட்டு விலையைவிட(+)1.42% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி (-) 0.06 % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி மெஸ்ஸர்ஸ் பாலன் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், எண்.10/2, வெல்லபிறந்தான் தெரு, சிதம்பரம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.683, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**17)** சிதம்பரம் நகராட்சி சிவகாமி அம்மன் கோவில் தெரு சந்து மழைக்காலங்களில் தேங்கிய மழைநீர் வெளியேற்றுவதில் சிரமம் ஏற்படுகின்றது. இதனால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு பெரிதும் சிரமம் ஏற்படுகின்றது. மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்க வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை அளித்துள்ளதன்பேரில் மேற்படி தெருவில் புதியதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.6,50,000/ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.684, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**18)** சிதம்பரம் நகராட்சி மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்டத்தை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி **2023–24–**ன்கீழ், வழங்கமன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ்விபரம் | விளம்பர நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினகரன் (வார்டு எண்.1,12,13,14,15,25,26,27 - இடம் விஜயலட்சுமி திருமண மண்டபம், பெரியார் தெரு, சிதம்பரம்) | 22.12.2023 | 20000 |
| | | கூடுதல் | 20000 |

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.685, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**19)** சிதம்பரம் நகராட்சி மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்டத்தை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி **2023–24–**ன்கீழ், வழங்கமன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

| வ. எ | நாளிதழ்விபரம் | விளம்பர நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | மாலை தமிழகம் (வார்டு எண்.1,12,13,14,15,25,26,27 - இடம் விஜயலட்சுமி திருமண மண்டபம், பெரியார் தெரு, சிதம்பரம்) | 22.12.2023 | 23100 |
| | | கூடுதல் | 23100 |

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.686, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**20**) சிதம்பரம் நகராட்சி மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்டத்தை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்றபட்டியல் தொகையை வருவாய்நிதி **2023–24–**ன்கீழ், வழங்கமன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ்விபரம் | விளம்பர நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினதந்தி (வார்டு எண்.1,12,13,14,15,25,26,27 - இடம் விஜயலட்சுமி திருமண மண்டபம், பெரியார் தெரு, சிதம்பரம்) | 22.12.2023 | 22260 |
| | | கூடுதல் | 22260 |

**அலுவலககுறிப்பு**- மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.687, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**21**) சிதம்பரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகன எண்.**TN31F8514** கழிவுநீர் வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்க மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை அகற்றுவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 1,50,000/- ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** - மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.688, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**22**) சிதம்பரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN 91 M 2553 Skid Loader வாகன வாங்கி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. மேற்படி வாகனத்தில் 4 டயர்களில் 1 டயர் வெத்தும், மேலும் 3 டயர்கள் மிகவும் பழுதுடைந்து இயக்க இயலாத நிலையிலும் உள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் டயர்களை புதியதாக வாங்கி பொருத்திட ஆகும் செலவினத்தொகை ரூ. 113420/- வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** - மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.689, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**23**) சிதம்பரம் நகராட்சி வார்டுஎண் 15 எல்லையம்மன் கோவில் தெரு மற்றும் தாகம் தீர்த்த பிள்ளையார் கோவில் தெருவில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி வெளியேற்றுவதில் சிரமம் ஏற்படுகின்றது. இதனால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு பெரிதும் சிரமம் ஏற்படுவதால் மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் மற்றம் சிறுபாலம் அமைக்க வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை அளித்துள்ளதன்பேரில் அப்பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.6,50,000/ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** - மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.690, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**24**) சிதம்பரம் நகராட்சி வார்டு எண் 2 இராஜலட்சுமி நகரில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி வெளியேற்றுவதில் சிரமம் ஏற்படுகின்றது. இதனால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு பெரிதும் சிரமம் ஏற்படுகின்றது. மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்க வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை

அளித்துள்ளதன்பேரில் அப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000/ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.691, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**25**) சிதம்பரம் நகராட்சி வார்டு எண் 24 பஜனை மட தெருவில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி வெளியேற்றுவதில் சிரமம் ஏற்படுகின்றது. இதனால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு பெரிதும் சிரமம் ஏற்படுகின்றது. மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை அளித்துள்ளதன்பேரில் அப்பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,50,000/ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.692, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**26**) சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 33, நேருநகரில் பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக பொதுகுடிநீர் குழாய் அமைத்து, பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க, மேற்படி தெருவில் புதியதாக பொது குடிநீர் குழாய் அமைப்பதற்கு ஆகும் உத்தேச ரூ.45,000/ஐ நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.693, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**27**) சிதம்பரம் நகராட்சிவார்டு எண்**. 2**–ல் சம்பந்தகார தெருவில் புதிய மினிபவர் பம்பு அமைத்து Sintex Tank மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க இப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கைக்கிணங்கவும், நகர்மன்ற தலைவரின் அறிவுறுத்தலின்படியும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ**.2,25,000/**க்கும் பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது**.**

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.694, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**28**) சிதம்பரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகன எண்.TN 31 F 8514 கழிவுநீர் வாகனத்திற்கு புதியதாக Jetting Hose Polyhose மற்றும் Hose Nazzle வாங்குவதற்கு ரூ. **3,45,000/-**ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.695, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**29**) தமிழக அரசின் கொள்கைக்கிணங்க நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை குடும்ப அறுவை சிகிச்சை செய்திட ஏதுவாக அறுவை சிகிச்சை நிலையத்தை புரணமைப்பு செய்தும் கருத்தடை செய்ய வேண்டி நாய்களை அடைக்க தடுப்பு அறை அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.7,00,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு -** மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.696, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**30**) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிகளில் கங்கைமகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் ஈடுபடுத்தப்பட்டு வரும் 50 DBC பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்தகாலம் 29.02.2024- ல் முடிவடைவதால், பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்க்கப்பட்டு வரும் கங்கை மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேலும் மூன்று மாதங்களுக்கு 01.03.2024 முதல் 31.05.2024 வரை பணி நீட்டிப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

1. மன்றம் அங்கீகரிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 2481/2001/எச்1)

**தீர்மானம் எண்.697, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**31**) இந்நகராட்சி கேட்பு வசூல் நிலுவை (DCB) பட்டியலின்படி Write off செய்வதற்கு **449** வரிவிதிப்பு எண்கள் சொத்துவரி விதிக்கப்பட்டு காலிமனை வரி நீக்கம் செய்யபடாமல், இரட்டிப்பு வரிவிதிப்பு மற்றும் கண்டுபிடிக்க முடியாத பழைய சொத்துவரி/காலிமனை வரி உள்ளது, அதற்கான விபர பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட **33** வார்டுகளில் உள்ள காலிமனை வரி மற்றும் சொத்துவரி எண்களோடு வரிவிதிப்பாளர் பெயர், கதவு எண் மற்றும் தெருக்களின் பெயரை ஒத்திசைவு செய்து அதன் உண்மைதன்மையை கண்டறிந்து வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் உதவியாளர் சான்றொப்பத்துடன் பரிந்துரைக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிமனை/சொத்து வரிவிதிப்புகளின் தவறுதலான கேட்புகளுக்குரிய தொகை ரூ.**11421631/–** கணினி கேட்பில் இருந்து நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0509/2021/அ2

**தீர்மானம் எண்.698, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**32**) சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களின் உரிம காலம் 31.03.2024 உடன் முடிவடைவதால் 01.04.2024 முதல் 31.03.2027 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட இந்நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன் பேரில் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 22.02.2024 அன்று மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒரு ஆண்டு கேள்வியாக (2024–2025) மூன்று இனத்திற்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) மேற்படி பட்டியலை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**சிதம்பரம் நகராட்சி**
**01.04.2024 முதல் 31.03.2027 வரையிலான மூன்றாண்டு குத்தகை இனங்கள் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி விபரம்**

| வ. எண். | குத்தகை இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் (திருவாளர்கள் / திருமதிகள்) | சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ. | மூன்றாண்டு சராசரி ரூ | (ஓராண்டு கேள்வி) 2024–2025ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | .தந்தைபெரியார் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை பகல் இரவு இரு நேரங்களிலும் வசூல் ஒரே ஏலமாக. | தமிழ்செல்வன், த/பெ. கலியபெருமாள், 373/1, எம்.ஜி.ஆர் நகர், பாதரகுடி, விளந்திட சமுத்திரம் (அஞ்சல்). | 0 | 0 | 478000 |
| 2 | தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுவரும் கட்டண கழிவறை உரிமம் | ஆர். மீனா, க/பெ. ராம்ராஜ்,24/30, மெய்காவல் தெரு, சிதம்பரம். | 0 | 0 | 460800 |
| 3 | தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் வண்ண தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம். | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை | 367503 | 350281 | 0 |
| 4 | தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறையில் (கிளாக் ரூம்) கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | வீரமுருகன், த/பெ. வீரப்பன், 50, சுசீலா நகர், சிதம்பரம். | 347985 | 331678 | 43000 |

**அலுவலக குறிப்பு :**

1. பட்டியலில் கண்டுள்ளவாறு வரிசை எண். 1, 02 மற்றும் 4ற்கு மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை ஏற்கலாம்.

2. வரிசை எண். 1, தந்தை பெரியார் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்து வசூல் உரிமைக்கு 2023–2024 ஆம் ஆண்டிற்கு ஏலம் போகாத காரணத்தால் அலுவலக துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள் மற்றும் வெளியில் செல்லும் பேருந்துகளுக்கு தற்காலிக தூய்மை பணியாளர்கள் மூலம் தினசரி வசூல் பணியினை மேற்கொள்கின்றனர். தோராயமாக (இரவு பகல் சேர்த்து) பேருந்து நிலையத்திற்கு ஒரு நாளைக்கு 370 முதல் 400 பேருந்துகள் வந்து செல்கின்றன. ஆனால் ஒரு நாளைக்கு 150x12=1800/– வசூல் செய்து நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் பேருந்து உரிமம் முடிவடைந்துவிட்டதால் வட்டார போக்குவரத்து அலுவலகம் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் பேருந்து நிலைய தரச்சான்று உரிமம் உத்தரவு பெறப்படாததால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து பேருந்துகளுக்கு நுழைவாயில் கட்டணம் செலுத்தப்படவில்லை. தற்போது தரச்சான்று பெற்று துறை மூலம் வசூல் செய்தால் நகராட்சிக்கு வசூல் கூடுதலாக கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. 2019–2020 ஆம் ஆண்டு குத்தகை ஏலம் விடப்பட்டதில் ரூ. 6,51,805/– ஏலம் சென்றுள்ளது. ஆனால் குத்தகைதாரரால் ஏலத்தொகை கூடுதலாக உள்ளதால், தொடர்ந்து நடத்தப்படவில்லை. அதன் பின் துறை மூலமே வசூல் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சியால் தினசரி நாள் ஒன்றுக்கு ரூ. 1800/–வீதமும், மாதத்திற்கு ரூ. 54,000/– வீதமும் பெறப்படுகிறது. அதில் ஆள் கூலி நபர் ஒன்றுக்கு ரூ. 500/– வீதமும், மாதத்திற்கு ரூ. 15,000/– மும் ஆண்டிற்கு ரூ. 1,80,000/– செலவிடப்படுகிறது. மொத்த வசூல் தொகை ஆண்டிற்கு ரூ. 6,04,800/– ல் ரூ. 1,80,000/– போக மீதம் ரூ. 4,68,000/– மட்டுமே நகராட்சிக்கு வசூல் தொகையாக கிடைக்கிறது. ஆகையால் 22.02.2024 அன்று நடைபெற்ற மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், ஆண்டு தொகையாக ரூ. 4,78,000/– க்கு திரு. தமிழ்ச்செல்வன் என்பவர் கொடுத்துள்ளதை மன்றம் ஏற்கலாம்.

3. வரிசை எண். 2, தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் கட்டண கழிவறை பேருந்து நிலையத்திற்கு ஒதுக்குப்புறமாக உள்ளது. புதிய கட்டண கழிவறையில், ஆண்கள் கழிவறை 6, குளியலறை 2, பெண்கள் கழிவறை 6 மற்றும் குளியலறை 2, மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறை 2 உள்ளன. பழைய பேருந்து நிலைய கட்டண கழிவறையில் ஆண்கள் கழிவறை 10, குளியலறை 5, பெண்கள் கழிவறை 10 எண்ணிக்கையும் உள்ளது. மேலும் இரண்டு இலவச கழிப்பறையும் உள்ளதால், மக்கள் புதியதாக கட்டப்பட்டு வரும் கட்டண கழிவறைக்கு அதிக அளவில் செல்ல வாய்ப்புகள் குறைவாக உள்ளதாலும், சென்ற முறை ஏலம் எடுத்த ஒப்பந்ததாரர் திரு. உத்திராபதி என்பவர் இந்த முறை ஏலத்தில் கலந்துகொள்ளாமல் புதிய கட்டண கழிவறையில் கட்டண வசூல் மிகவும் குறைவாக வரும் என்பதாலும், ஏல வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை அதிகமாக உள்ளதாலும், ஏல தொகை பாதிக்கு மேல் குறைவாக எடுக்க வேண்டியுள்ளதால், இந்த ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை என கடிதம் அளித்துள்ளார். எனவே, இதனை கருத்திற்கொண்டு இரண்டாவது முறையாக திருமதி. ஆர். மீனா என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 4,60,800/– ஐ மன்றம் ஏற்கலாம்.

4. வரிசை எண். 3, தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் வண்ண தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க எவரும் முன்வரவில்லை. ஆகையால் இந்த இனத்திற்கு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

5. வரிசை எண். 4, தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறையில் (கிளாக் ரூம்) கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு, ஒப்பந்தப்புள்ளி தொகையானது மிகவும் குறைவாக உள்ளதால், மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**(ந.க.எண்: 2743/2023/அ1)**

**தீர்மானம் எண்.699, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**33**) சிதம்பரம் நகராட்சியின் 2023-2024 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2024-2025 ஆம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடு UTIS Software மூலம் தயார் செய்து மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.94/2022/பி2

**தீர்மானம் எண்.700, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**34**) சிதம்பரம் நகராட்சிப் பகுதிகளில் பழைய மற்றும் புதிய பாதாள சாக்கடைத் திட்டங்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி திட்டத்திற்கான பராமரிப்பு பணிகள் தமிழ்நாடு குடிநீர்வடிகால்வாரியத்தின்மூலம்மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும் பழைய ஆய்வுக் குழிகள் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருவதால், பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு போதிய பணியாட்கள் இல்லாத காரணத்தால், அவ்வப்போது Manhole நிரம்பி வழிந்த வண்ணம் உள்ளது. மேலும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால், இதனை உடனுக்குடன் சரிசெய்ய 5 பணியாட்களை வெளிமுகமை மூலம் வைத்து பணிமேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.701, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(ஒம்).கே.ஆர்.செந்தில்குமார்**
**நகர்மன்ற தலைவர்**
**சிதம்பரம் நகராட்சி**

**சிதம்பரம்**
**19.02.2024**

**//உண்மை நகல் உத்தரவுபடி//**

**ஆணையாளர்**
**சிதம்பரம் நகராட்சி.**